**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**ஊத்துக்குளி**

**அசல் வழக்கு எண் 23/2024**

**PW: 1**

2025–ஆம் ஆண்டு, ஜுன் திங்கள், 05 ஆம் நாள், வாதி தரப்பு (வா.சா.ஆ.1) சாட்சியின் வாக்கு மூலம் 1969ம் ஆண்டு விதி 44 ன் படி திரு.பா.தரணீதர், பி.ஏ.,எல்.எல்.எம்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஊத்துக்குளி, அவர்களால் ஆனையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| Name | மைதிலி | Caste | |
| Father Name | கணேசன் | Calling | |
| Village | பன்னிமடை கிராமம் | Religion | |
| Taluk | கோவை | Age | 27 |

தேதி 05.06.2025

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாதியின் தரப்பில் முதல் விசாரணை</u>**

கோவை மாவட்டம், பன்னிமடை கிராமம், சிரஞ்சீவி நகர், கதவு எண்.2/253–ல் வசிக்கும் காலம் சென்ற கணேசனின் மகள் மைதிலி ஆகிய நான் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் அதை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நான் இந்த வழக்கில் 1–ம் வாதி ஆவேன்.

**<u>ஆவணங்கள்</u>**

1. 25.07.2017 தேதிய அசல் வழக்கு எண்.341/2012 –ன் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசியின் தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 25.07.2017 தேதிய அசல் வழக்கு எண்.341/2012 –ன் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசியின் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 16.03.2007 தேதிய கிரைய ஆவணம் உண்மை நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 11.05.2018 தேதிய கணேசனின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 23.07.2018 தேதிய கணேசனின் வாரிசு சான்றிதழ் இணையவழி நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 21.03.2024 தேதிய கிரைய ஆவண எண். 1319/2024 –ன் இணையவழி சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 26.10.2023 தேதிய தானசெட்டில்மென்ட் பத்திர எண்.5379/2023–ன் இணையவழி சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(பிரதிவாதி தோன்றாதரப்பினராக உள்ளதால் குறுக்கு விசாரணை இல்லை.)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2025.06.05 16:08:36 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.